“பெரும்பான்மை மதங்களின் மூலப் போதனைகள் மற்றும் ஐதிகங்களை அவதூறு செய்யும்” வெளியீடுகளுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு புத்தசாசன மற்றும் மத விவகாரங்களுக்கான அமைச்சு புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவது தொடர்பான அறிக்கைகளினால் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளது. இச் செயற்பாட்டின் ஓர் முதல் நடவடிக்கையாக, பௌத்த மதம், அதன் தத்துவங்கள் மற்றும் ஐதிகங்களை மீறுவதாகக் காணப்படும் எந்த வெளியீட்டையும் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரம் கொண்ட ஓர் “பௌத்த வெளியீட்டுக் கட்டுப்பாட்டு சபை” என்பதன் ஸ்தாபித்தலுக்கான ஒரு சட்ட மூலம் சட்ட மாஅதிபரின் பார்வைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இந்த அறிக்கைகள் தெரிவிக்கின்றன. மத ஐக்கியங்களை முன்னேற்றுதல் மீதான கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவது உட்பட, சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்கம் மற்றும் நல்லெண்ணம் தொடர்பானவை என அரசாங்கத்தின் உடனடியான கவனத்தைக் கோரும் விடயங்கள் பல இருக்கையிலும் மற்றும் இதேயளவான கவனத்தை அவை பெற்றுக்கொள்ளாத போதும், இத்தகையதொரு ஏற்பாடு எவ்வாறு ஒரு முன்னுரிமையைப் பெறுகிறது என்பதை எங்களால் புரிந்து கொள்ள முடியாதுள்ளது. அரசாங்கத்தினால் குறிப்பிடப்படுவது போன்று, தேசிய பாதுகாப்புக் கவனங்களின் கீழான ஒன்றானவையாக பிரேரிக்கப்படும் இந்த முறைமைகளின் பின்னணிச் சூழலையும் மா.கொ.நி கவனத்தில் கொள்கின்றதுடன், ஜனநாயகச் சுதந்திரங்கள் தொடர்ச்சியாக மிதிக்கப்படுவதோடு அறிவுசார் சுதந்திரம் மற்றும் சிறுபான்மையினர் கலாச்சார உரிமைகள் என்பவற்றிலும் கடுமையான திடீர்த் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த சட்டமூலம், சட்டமாக்கப்படின், பெரும்பான்மைவாத மதத் தீவிரவாதம் மற்றும் மதவாத வன்முறை நோக்கி இலங்கை வழுகிச் செல்வதற்கு அனுமதிக்கும் மேலுமோர் உத்தியோக பூர்வ இலச்சினையை அது பொறிக்கும். சில பௌத்த குழுக்களினால், இஸ்லாமிய மற்றும் கிறிஸ்தவ வழிபாட்டுத் தலங்கள் மீதான பல்வேறு தாக்குதல்களினால் குறிப்பிடப்படக்கூடிய தீவிர தேசியவாத வன்முறைகளின் அண்மைய எழுச்சி, இலங்கையில் போருக்கு பிந்திய பலவீனமான அமைதியை மேலும் தகர்ப்பதாக அமைகிறது. மக்களின் மத நம்பிக்கைகள் மீது அரசாங்கம் அனுமதித்த வடிவங்களின் ஒருதலைப்பட்சமான சுமத்துதலுக்கு சட்டமூலம் இட்டுச்செல்லும் என்பதோடு, அனைத்து ஊடகங்களிலுமாக, அரசாங்கத்தின் கோட்பாட்டை கேள்விகளுக்கு உட்படுத்தும் இறையியல் போதனை, அறிவுசார் ஆராய்தல் அல்லது திறனாய்வுக் கருத்துக்கள் என்பவற்றையும் பயனுறுதியான வகையில் அது தடை செய்யுமாதலால், மதங்களின் “மூலப் போதனைகள் மற்றும் ஐதிகங்களை” பாதுகாப்பதற்கு முனைவதன் மூலம் ஓர் மிகவும் உண்மையான ஆபத்து உள்ளது. கலந்துரையாடல் மற்றும் சகிப்புத்தன்மை என்பவற்றுக்கு மதிப்பளிக்கும் ஓர் வகையில் மதப் போதனைகளை பொருள் விளக்கம் கொள்வதிலான முயற்சிகளை சட்டமூலத்தின் செயன்முறை கடுமையாக அச்சுறுத்துவது, தவிர்க்கமுடியாததாக இருக்கும்.

சட்ட மூலம், சட்டமாக்கப்படின், அது “ஓர் மதத்தைப் பின்பற்றுவதற்கு அல்லது அவரது விருப்பக்குரிய நம்பிக்கையைக் கொண்டிருப்பதற்கான சுதந்திரம் உட்பட, எந்தவொரு நபருக்கும் “சிந்தனை, மனச்சாட்சி மற்றும் மதம் என்பவற்றுக்கான சுதந்திரத்தை” உத்தரவாதப்படுத்தும் அரசியலமைப்பின் உறுப்புரை 10 ஐயும் தெளிவாக மீறுகிறது. இந்த அடிப்படை உரிமை மீது எத்தகையதும் மற்றும் எந்தவொரு மட்டுப்படுத்தலையும், அரசியலமைப்பு அனுமதிக்காது என்பதை நினைவில் கொள்வது முக்கியமானதாகும். இந்த நடவடிக்கை அரசியலமைப்பின் உறுப்புரை 14 இனால் பாதுகாக்கப்பட்ட பிரசுரித்தல் உட்பட பேச்சு மற்றும் கருத்து தெரிவிப்பதற்கான சுதந்திரம் மற்றும் இலங்கை ஓர் அரச தரப்பான குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச சமவாயத்தின் (ICCPR) உறுப்புரை

19 என்பவற்றின் மீதும் ஓர் மோசமான பாதிப்பையும் கொண்டிருக்கும். எங்களது வாதத்தில், மத நம்பிக்கை மற்றும் நல்லொழுக்கம் என்பவற்றின் மீது அரச கட்டுப்படுத்தலின் எந்த முயற்சியிலும் பொதிந்திருக்கும் துஷ்பிரயோகத்துக்கான நோக்கம் உட்பட, புதிய நடவடிக்கைகளால் விதிக்கப்படக்கூடிய கருத்துச் சுதந்திரத்தின் மீதான பரந்த பல்வகையான மட்டுப்படுத்தல்களின் சாத்தியத்தை அரசியலமைப்போ அன்றேல் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச சமவாயமோ அனுமதிக்காது.

தற்போதிருக்கின்ற சட்டவாக்கம், பகைமையைத் தூண்டும் உரைகள் மூலமாக வன்முறைகளைத் தூண்டிவிடுவதை ஏற்கனவே தடைசெய்கின்றன என்பதையும் மா.கொ.நி கவனத்தில் கொள்கின்றது. 2007ஆம் ஆண்டு குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச சமவாயச் சட்டத்தின் பிரிவு 3, 'பாரபட்சம், பகைமை அல்லது வன்முறை என்பவற்றைத் தூண்டிவிடுவதை ஏற்படுத்துகின்ற தேசிய, இன அல்லது மத விரோதங்களின்' ஆதரித்தலை தடைசெய்கின்றது. இது தொடர்பில், உத்தேசிக்கப்பட்ட சட்ட மூலம் மாறுபட்ட கருத்துக் கொண்ட குரல்களை தொல்லைப்படுத்துவதற்கும் மற்றும் நெருக்குதல்களுக்கு உட்படுத்துவதற்குமாக தெரிவு செய்யப்பட்ட வகையில் பிரயோகிக்கப்படும் என்பது குறித்து நாம் கரிசனை கொண்டுள்ளோம். 'மத, இன அல்லது சமூக ஒற்றுமையின்மையை அல்லது தீய நோக்கிலான உணர்வுகள் அல்லது வேறுபட்ட சமூகங்கள் அல்லது இன அல்லது மதக் குழுக்களுக்கிடையில் பகைமையை' ஏற்படுத்தும் அல்லது வன்முறை நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் நோக்கிலான' உரையைத் தடைசெய்யும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் பிரிவு 2 (1) (ஏ), ஜெயப்பிரகாஷ் திஸ்ஸநாயகம், சரத் பொன்சேக்கா மற்றும் மிக அண்மையில் அசாத் சாலி உட்பட, ஊடகவியலாளர்கள் மற்றும் அரசை எதிர்ப்பவர்களைத் தடுத்து வைப்பதற்கும் மற்றும் எதிராக வழக்குத் தொடுப்பதற்குமாக அண்மைக் காலங்களில் பிரத்தியேகமாக உபயோகிக்கப்பட்டது குறித்தும் நாங்கள் அவதானமாக இருக்கிறோம். இருந்தும், இச்சட்டத்தின் இதே ஏற்பாடுகள் சிறுபான்மையினரின் வணக்க ஸ்தலங்கள் மீதான பௌதிக ரீதியான வன்முறைகளின் அடாவடியான நடவடிக்கைகளைத் தடுப்பதற்கும் மற்றும் எதிராக வழக்குத் தொடுப்பதற்கும் உபயோகிக்கபடவில்லை. பேச்சுச் சுதந்திரம் மீதான ஏனைய கட்டுப்படுத்தல்களின் தெரிந்தெடுத்த முறையிலான பிரயோகத்தின் இந்த வரலாறு இந்ச சட்ட மூலத்தின் அறிமுகத்தின் பின்னணியிலள்ள நோக்கங்கள் மீது கேள்விகளைத் தீவிரமாக எழுப்புகின்றது.

ஆகையால், பாராளுமன்றத்துக்கு இந்த சட்ட மூலத்தை அறிமுகப்படுத்துவதிலிருந்து நிறுத்திக் கொள்ளுமாறு அரசாங்கத்தை மா.கொ.நி கேட்டுக் கொள்கிறது. இந்தச் சட்ட மூலம் மற்றும் அதன் அறிமுகத்துக்கான நோக்கங்கள் முற்றிலுமாக ஏற்றுக்கொள்ளத்தக்கவையல்ல என்பதை அரசாங்கத்தின் மீது வலியுறுத்துவதற்கு இலங்கையில் சட்டத்தினாட்சி, அடிப்படை உரிமைகள் மற்றும் மத ஒற்றுமை என்பவற்றுடன் அக்கறை கொண்ட அனைவரையும் நாம் அழைக்கின்றோம்.

மதத் தீவிரவாதத்தின் எழுச்சி மற்றும் சகிப்புத்தன்மையின்மை என்பவற்றைக் கட்டுப் படுத்துவது பற்றியும் மற்றும் மதங்களிற்கிடையிலான சக வாழ்வை முன்னேற்றுவது குறித்தும் அரசாங்கம் உண்மையிலேயே தீவிரம் கொண்டிருப்பின், அது பின்வருவனவற்றை மேற்கொள்வதற்கு மா.கொ.நி மேலும் பரிந்துரைக்கிறது:

1. மதரீதியாக சாத்தியமான பதட்டங்களின் ஓர் முன்கூட்டிய எச்சரிக்கும் மற்றும் அதனை அணைக்கின்ற ஓர் முறைமையாகவும் செயற்படக்கூடிய மத நம்பிக்கை குழுக்களுடன் கலந்தாலோசனைக்கான ஒரு பொறிமுறையை உருவாக்குவதற்கு

வேண்டுகின்ற, மத ஒற்றுமை மற்றும் சக வாழ்வை முன்னேற்றுதல் மீதான கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு உடன் நடவடிக்கைகளை எடுத்தல், இது அரசாங்கத்தின் க.பா.ந.ஆ இன் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை.

2. குற்ற விலக்களிப்புக் கலாச்சாரத்துக்கு ஒரு முற்றுப்புள்ளியை இட்டும் மற்றும் மத வழிபாட்டுத் தலங்கள் மீதான தாக்குதல்களின் குற்றவாளிகளைப் புலன்விசாரித்தல், கைது செய்தல் மற்றும் வழக்குத் தொடர்தல் என்பவற்றை உறுதிசெய்தல்.